# மேல்மாகாணக் கல்வித்திணைக்களம்
# ஆண்டு இறுதி மதிப்பீடு - 2019

தரம்: 10 பாடம் : தமிழ்மொழியும் இலக்கியம் வினாத்தாள் :

**புள்ளித்திட்டம்**

பகுதி i

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 11 | 2 | 21 | 1 | 31 | 3 |
| 2 | 4 | 12 | 4 | 22 | 3 | 32 | 1 |
| 3 | 1 | 13 | 3 | 23 | 4 | 33 | 2 |
| 4 | 2 | 14 | 2 | 24 | 2 | 34 | 1 |
| 5 | 3 | 15 | 1 | 25 | 2 | 35 | 4 |
| 6 | 4 | 16 | 1 | 26 | 1 | 36 | 3 |
| 7 | 2 | 17 | 3 | 27 | 3 | 37 | 4 |
| 8 | 3 | 18 | 4 | 28 | 4 | 38 | 2 |
| 9 | 1 | 19 | 2 | 29 | 1 | 39 | 2 |
| 10 | 2 | 20 | 4 | 30 | 2 | 40 | 3 |

**பகுதி II**

**01.**(i) முழங்கு திரை புனல் அருவி கழங்கு என முத்தாடும்

(ii) ‘‘என்னடா மச்சான், இப்ப மாபிள் அடிக்கிறதை விட்டுக் கிறிக்கட் அடிக்கத் துவங்கிவிட்டாயாம்?’’

(iii) பொருத்தமான வாக்கியம்
காய் -
காய் - காய்ந்தது

(iv) பாடி மகிழ்ந்தனர், படித்து முடித்தான்

(v)
* விற்பனையை அதிகரித்தல்
* பாவனையை அதிகரித்தல்
* பிரசித்தப்படுத்தல்
* நாட்டத்தை, விருப்பத்தை ஏற்படுத்தல்
* தகவல்களை அளித்தல் வழங்குதல்
* பிரசாரப்படுத்தல் (ஏதாவது இரண்டு)

(vi) உருவக அணி, அவசரம் சூறாவளியாக உருவகிக்கப்பட்டுள்ளது.

(vii) எழுவாய் - நளன்
பயனிலை – நீங்கினான்

(viii) தலைப்பு, விளிப்பு, விடயவிபரிப்பு, வெளியிடுபவர் பெயர், முகவரியும் திகதியும்

(ix) அகப்புணர்ச்சி – நாம் +கள் = நாங்கள்

உண்+ட்+ஆன் = உண்டான்

புறப்புணர்ச்சி = வேல்+எறிந்தான் = வேலெறிந்தான்

பூ +கொடி = பூங்கொடி

(இது போன்ற பொருத்தமான உதாரணங்கள்)

(x) ஆசிரியர் கவிதையை வாசிப்பித்தார்.

(10x2 = 20 புள்ளிகள்)

(2) கட்டுரை

பொருளமைவும் அளவும் = 12 புள்ளிகள்

கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும் = 06 புள்ளிகள்

எழுத்து நுட்பங்கள் = 05 புள்ளிகள்

தலையங்கம் - 02 புள்ளிகள்

மொத்தம் 25 புள்ளிகள்

(3) சுருக்கம்

* மக்கள் கலைச் செல்வங்களின் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டே நாட்டின் முன்னேற்றம் மதிப்பிடப்படல்

* பேரரசுகள் மறைந்த போதிலும் மக்கள் கலைச் செல்வங்கள் அழியாமை, அதே வேளை காலத்திற்கேற்ப மாற்றமடைந்துள்ளமை.

* அரசியற் சக்திகள் மக்கள் கலைக்குப் புதியதொரு வேகத்தை அளித்தமை.

* அரசியற் புரட்சிகள் மக்கள் நிலையை உயர்த்தியமை

* ஆரம்பத்தில் மக்களைப் பற்றிப் பாடாது அரசர்கள், பிரபுக்கள் பற்றியே இலக்கியங்கள் எழுந்தமை

* தொழிலாளர்கள் பற்றிக் கவனம் செலுத்தப்படவில்லை. கவனம் செலுத்திய ஆராய்ச்சியாளர்களும் புறக்கணிக்கப்பட்டமை.

* பொதுமக்கள் யுகத்தில் பொது மக்களின் கலைகளுக்கு மதிப்பு கொடுக்கப்பட வேண்டியதன் அவசியம்

4. (அ) வலை போன்ற அமைப்பையுடைய தசைகளும், தசை நார்களும் விரல்களையும் முன்கைகளையும் எத்திசையிலும் அசைக்க உதவுகின்றன.

(ஆ) பெரு விரலின் துணையின்றி எந்த ஒரு சிறுகாரியத்தையும் செய்ய முடியாது.

(இ) ஒற்றுமை: - முற்காலத்தில் குரங்கைப் போலவே மனிதனும் கைகளையே முன்னங்கால்களாகப் பயன்படுத்தினான்.

வேற்றுமை : - பிற்காலத்தில் மனிதன் கைகளால் வேலைகளைச் செய்து இருகால்களாலும் நடக்கத்தொடங்கினான். ஆனால் குரங்கு அவ்வாறு செய்யவில்லை.

- பிற்கால மனிதன் மரத்தில் வசிக்கவில்லை. ஆனால் குரங்கு தொடர்ந்தும் மரத்திலேயே வசிக்கின்றது.

(ஈ) 1. குச்சிகளையும் கற்களையும் கண்டுபிடித்தான்
2.கண், மூக்கு ஆகியவற்றின் அருகே பொருட்களை கொண்டு சென்றான்
3.பலமாக கற்களைப் பழ மரங்களை நோக்கி வீசினான்
4.பூமிக்கடியில் வளரும் கிழங்கு வகைகளைத் தன் கைகளால் தோண்டி எடுத்தான்.

(உ) மரியாதையை எடுத்துக்காட்ட – கைகளை கூப்பி வணங்குதல், அணிவகுப்பு மரியாதை செய்தல்.

நட்பை எடுத்துக்காட்ட – கைலாகு கொடுத்தல்

சிநேக பூர்வமாக கைகளால் அணைத்தல்

(5x2 = 10 புள்ளிகள்)

(5) அமைப்பு – 4 புள்ளிகள்

உள்ளடக்கம் - 8 புள்ளிகள்

மொழிநடை – 3 புள்ளிகள்

மொத்தம் 15 புள்ளிகள்

**III பகுதி**

1. (அ) வெற்றிவேற்கை
(ஆ) பிறருக்கு உதவுவதன் அடிப்படையிலேயே பெரியவர், சிறியவர் என்ற பேதம் அமையும்

2. (அ) நாயக்கர் காலம்

(ஆ) அரி, அயன், அரன்

3. (அ) ஏழைக்கு தீங்கு செய்யக்கூடாது

(ஆ) கிழக்குப் பிரதேசம்

4. (அ) இராமன்

(ஆ) கைகேயி தனது கணவனான தசரதன் சுடுகாட்டிற்கு செல்ல காரணமானவள்

5. (அ) தான் விரும்பியதை அடைய முடியாது தவிப்பவரின் குணவியல்புகள்

(ஆ) கோபம்

6. (அ) ஒரு காட்சி மங்கி, அதே தருணத்தில் அடுத்த காட்சி திரையில் தோன்றுவது

(ஆ) சு. தியடோர் பாஸ்கரன்

7. (அ) காளமேகப்புலவர்

(ஆ) உருவக அணி

8. (அ) ஒரே பார்வையில் எண்ணும்கலை

(ஆ) தேர்ச்சியடைதல்

9. (அ) வை விசுவநாதப்பிள்ளை, சி.வை. தாமோதரம்பிள்ளை
(ஆ) வை. விசுவநாதப்பிள்ளை

10. (அ) பரதனால்
(ஆ) கம்பராமாயணம் / இராமாயணம்

(2x10 = புள்ளிகள்)

(2) (i) (அ) எரிகின்ற சுடுகாட்டிலே தன் துணைவன் செல்லவும்
மகன் துயர்க்கடலிலே புகவும்
கருணைக் கடலான இராமன் கொடிய வனத்திலே செல்லவும்
(ஆ) நெடுமையால் - திருமால் கொடுமையால் - கைகேயி

(ii) (அ) நித்தியம், நைமித்தியம், காமியம்

(ஆ) நாததத்துவத்தின் மெய்ப்பொருளாக அரி, அயன், அரன் என மூன்றுருவாக விளங்குவார்.

(iii) (அ) கழிக்கத்தக்க பொருட்பிழைகளை விலக்குதல்
கடல் போன்ற நல்ல நூல்களை அறிவுக்கு உணவாக உட்கொள்ளல்

(ஆ) புலவர்களுடைய மனமாகிய வானத்திலே இடிபோல இடித்து மின்னலைப் போல் மின்னி கவிதையை மழையாகப் பொழிபவர்

(iv) (அ) அங்கவஸ்திரம், ஆவாகனம்

(ஆ) தனியாகப் பிடித்து வைத்தல்

(v) (அ) பேசும் வார்த்தைகள், இயல்பான ஒலி, இசை

(ஆ) ஒலி முக்கியத்துவம் பெற்று காட்சிப்படிமங்கள் இரண்டாவது இடத்துக்கு தள்ளப்படும்போது

(4x5 = 20 புள்ளிகள்)

**(3)** (அ) தன் கணவனாகிய தசரதன் சுடுகாட்டிற்குச் செல்ல காரணமானவள் மகனாகிய பரதனை துன்பக்கடலில் செலுத்தியவள்.

அருட்கடலாகிய இராமன் கொடுமையான காட்டிடை செல்லவைத்தவள்

கொடுமையால் உலகை அளந்தவள்

(ஆ) சத்திய வழியின்றும் சிறிதும் மாறுபடாத, தன் வாய்மையை என்றும் நிலைபெறச் செய்து,

இறந்தவனாகிய தசரதனின் இளைய பட்டத்தரசி

எல்லா மக்களும் வணங்கத்தக்க குல தெய்வமாகிய இராமனுக்கு பின்னே பிறந்த, இராமனை விட்டு நீங்காத இலக்குமணனை பெற்றெடுத்த பெருமைக்குரியவள்

**அல்லது**

(அ) மாடுகளை அடைத்து வைக்கும் பட்டியினுள் அவற்றின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும்.

தாராளமாக பசுப்பாலும் அரிசியும் கிடைத்து பாற்பொங்கல் பொங்குவது ஓங்க வேண்டும்.

உழவுத்தொழில் மூலம் செல்வம் பெருக வேண்டும்

பூமியில் உள்ளவர்கள் குறைவின்றி வாழ வேண்டும்

எமது நாடு செழிப்புடன் விளங்க வேண்டும்

காலம் தவறாது மழை பொழிய வேண்டும்

ஏர்பூட்டிச் செய்யும் உழவுத்தொழில் வளர்ச்சிகாண வேண்டும்

உலக மக்கள் அனைவரும் சிறப்புடன் வாழ வேண்டும்

(ஆ) வேகத்துடன் அரிவிவெட்டும் இளைஞர்களை பிறர் கண்ணூறு என்னும் குற்றம் அணுகாமல் காக்க வேண்டும்.

வளர்ந்து முதிர்ந்த நெல்லை வெட்டுகின்ற இளைஞர்களை பிறரது நாவூறு என்னும் குற்றம் அணுகாது காக்க வேண்டும்.

(8+7= 15 புள்ளிகள்)

**(4)** அ.

- தமிழ்ச் சினிமா நாடகத் தன்மைக்கு அடிமைப்பட்டிருத்தல்
- பேசும் படத்தின் செல்வாக்கு
- ஆரம்ப காலத்தில் புராண நாடகங்கள் படமாக்கப்பட்டன
- சினிமாத்துறை சார்ந்தோர் நாடகத்திலிருந்து வந்தமை
- ஒலியமைப்பில் வேறுபாடு காட்டாமை

- இசையமைப்பு சீரின்மை
- படிமத்தை ஏற்படுத்தாமை
- பல்சுவைப் பதிவாக அமைகின்றமை

ஆ.

- காட்சிப் படிமத்தை கொண்டிருத்தல்
- காட்சிப்படிமத்தோடு இணைந்த ஒலியமைப்பு
- செம்மையான படத்தொகுப்பு
- சினிமா மொழியைக் கையாளல்
- சிறந்த ஒளிப் பதிவு
- குறியீட்டுப் பயன்பாட்டைச் சீராக மேற்கொள்ளல்
- வார்த்தைகளாலன்றி காட்சிகளால் படிமங்களை ஏற்படுத்தல்
- கருவுடன் ஒத்திசைந்த போக்கு
- சிறந்த அனுபவத்தைத் தரல்
- அறிவோடு இணைந்ததாக இருத்தல்

**அல்லது**

(அ) நாவலரின் நேர்மை

* நாவலரும் விசுநாதப்பிள்ளையும் இளமை தொடக்கம் பத்திரிகை வாயிலாக வாதம் செய்து வந்தவர்கள். விசுவநாதப்பிள்ளை நாவலரை எதிர்த்து பல கண்டனப் பத்திரிகைகள் பதித்து வெளியிட்டவர். ஆயினும் சிதம்பரத்திலே நாவலர் அவர்களோடு வாதஞ்செய்து நாவலரின் கொள்கைக்கு இணங்கி அவர்களிடம் மதிப்பு வைத்து அன்று தொடக்கம் நாவலரைக் குருவாக ஏற்றுக் கொண்டவர். என்பதனூடாக நாவலரின் நேர்மை எடுத்துக் காட்டப்படுகிறது.

* நல்லூர் கோயிலாருக்கும் பிராமணர்களுக்கும் பாரிய வழக்கு நடந்தது. நல்லூர் கோயிலாருக்கு பிறிற்றோவும் பிராமணர்களுக்கு நாவலரும் ஆதரவு வழங்கிக் கொண்டிருந்தனர். நாவலருக்கு யாழ்ப்பாணத்தில் இருந்த செல்வாக்கை அறிந்த பிறிற்றோ நாவலர் தமக்குச் சார்பாக நடந்தால் பிராமணர்களுக்கு வெற்றி கிடைக்கத்தக்க வகையில் வழக்கை நடத்திவைப்பதாக அந்தரங்க நண்பர்கசள், கடிதங்கள் தந்திகள் மூலமாக தெரிவித்திருந்தார். இந்த நேர்மையற்ற செயல் நாவலரவர்கள் இருதயத்தில் பெரு நெருப்பைக் கொளுத்தி விட்டது என்று கட்டுரையாசிரியர் குறிப்பிடுவதன் மூலம் நாவலரின் நேர்மை எடுத்துக் காட்டப்படுகிறது.

(ஆ) பிறிற்றோவின் நேர்மையீனம்

நல்லூர் கோயிலாருக்கும் பிராமணர்களுக்கும் பாரிய வழக்கு நடந்தது. நல்லூர்க் கோயிலாருக்கு பிற்றோவும் பிராமணர்களுக்கு நாவலரும் ஆதரவு வழங்கிக் கொண்டிருந்தனர். நாவலர் தனக்கு சார்பாக நடந்தால் பிராமணர்களுக்கு வழக்கில் வெற்றி கிடைக்கத்தக்க வகையில் செய்வேன் என தெரிவித்த விடயம்

(8+ 7 = 15 புள்ளிகள்)

(5) அ. யானை பழியுணர்ச்சிமிக்கது. பல நாட் பழகினும் தன்னை வளர்த்த பாகனையே கொல்லும். அத்தகைய குணமுடையோர் நட்பை விலக்கிவிட வேண்டும்.

நாய் நன்றியுள்ளது. எசமான் தண்டித்தாலும் வாலை வளைத்து ஆட்டும். அது போன்ற குணமுடையோர் நட்பை தழுவிக்கொள்ள வேண்டும்.

ஆ. மடைத்தலையில் சிறிய மீன்களை ஓடவிட்டு பெரியமீன் வரும்வரை அடக்கமாக காத்திருத்தல் போல தமக்கு ஏற்றவர் அல்லாதவரைத் தவிர்த்து ஏற்ற எதிரிகள் வரும் வரை அடக்கமுடையோர் காத்திருப்பர். ஆகவே அவர்களை அறிவில்லாதவர் என்று எண்ணி வெல்ல நினைக்கக் கூடாது.

(5+5 = 10 புள்ளிகள்)

(6) அ. நல்ல நூலாகிய கடலிலுள்ள நூல்களில் பொருட்பிழையுள்ளவற்றை விலக்கி ஏனையவற்றை கற்று, அருவிகள் வழியும் பொதியை மலையினில் காலூன்றி அழகாக கவிதை பொழியும் புலவர்களின் மனமாகிய வானத்திலே இடித்து முழங்கி மின்னி கவிதை மழை பொழிபவர்.

ஆ. கொடிய பஞ்சகாலத்தில் பொன்னும் நெல்லும் சமமாக நிறுத்து விற்கப்பட்ட வேளையிலும் இரப்போர் வந்து கதவைத்தட்டிய போது, இரப்பவரின் தட்டு நீட்டப்படுவதற்கு முன்னரே அன்னம் கொடுப்பதற்கு தயாராக இருந்த மார்தட்டி வள்ளல்.

(7) அ. தாழும் உள்ளம்

சோம்பியிருப்பவர்

தாவித் தாவி ஆடுபோல் பலபொருட்களை விரும்பி நிற்றல்

தம்மை வீழ்ச்சியடையச் செய்யும் இடையூற்றினுக்கு அஞ்சுதல்

ஆ. (i) தேசப்பக்தர்களை அழித்துவிட மன்னர்களின் படைவீரர்கள் காத்திருப்பது போல பாரதியார் பெண்ணின் வருகைக்காக காத்திருத்தல்

(ii) மணி நித்திலம் - பற்களுக்கு

( iii) கொம்பில்லாத சிறுவிலங்கு தேர்ச்சில்லு உருளும் பாதையில் இழுத்துச் செல்வதைப் போல – அவளது நினைவுகளால் இழுத்துச் செல்லப்படல்

(iv) ஆடுபோல தாவித்தாவி – பல பொருள் நாடுபவர்

(v) கண்ணில்லாதவர் - அறியாமைமிக்கவர்.

(5+5= 10 புள்ளிகள்)